**போக்குவரத்து ஆணையர், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர்: திரு.சி.நடராசன், இ.ஆ.ப.,**

**செ.மு.ஆ.எண்.35600/ஆர்பி1/2021 (ப.ஆ.எண்.161/2022) நாள்.22.03.2022**

பொருள்: பணியமைப்பு - போக்குவரத்துத் துறை – கருணை அடிப்படை பணிநியமனம் - திரு.P.பாபுராஜ், இரவுக் காவலர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், சென்னை(தெற்கு) - தனது பணிக்காலத்தில் 06.07.2021 அன்று மரணமடைந்தது - அவரது மகளும் வாரிசுதாரருமான செல்வி.பா.பிரியதர்ஷினி அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் பெறப்பட்டது - மனு பரிசீலிக்கப்பட்டது- இளநிலை உதவியாளர் நிலையில் அலுவலகம் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. வட்டாரப் போக்குவரத்து அலுவலர், சென்னை(தெற்கு) அவர்களின் கடிதம் எண்.22170/B2/2021, நாள்:12.01.2022 மற்றும் அதனுடன் இணைத்துப் பெறப்பட்ட செலவி.பா.பிரியதர்ஷினி அவர்களின் கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோரும் மனு நாள்.06.12.2021.
2. அரசாணை (நிலை) எண் : 18, பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு (Q1) துறை நாள்: 23.01.2020
3. அரசாணை (நிலை) எண் : 382, நிதி (CMPC), துறை நாள்: 24.10.2020.

---

**ஆணை:**

சென்னை(தெற்கு), வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் இரவுக் காவலராக பணிபுரிந்த திரு.P.பாபுராஜ் அவர்கள் தமது பணிக்காலத்தில், 06.07.2021 அன்று இறந்ததைத் தொடர்ந்து, அன்னாருடைய மகளும் வாரிசுதாரருமான செல்வி.பா.பிரியதர்ஷினி அவர்களுக்கு கருணை அடிப்படையில் போக்குவரத்துத் துறையில் பணிநியமனம் கோரும் மனுவானது பார்வை-1ல் காணும் கடிதத்துடன் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டது.

2. தனியரின் விண்ணப்பம் பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் - 2016 சட்டப்பிரிவுகளின் படி பரிசீலிக்கப்பட்டது. தனியர் இளநிலை உதவியாளர் பதவிக்கு உரிய தகுதிகளைப் பெற்றுள்ளதால், அன்னாருக்கு, 2016-ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் சட்டப்பிரிவு 17(1)-ன் படி, கருணை அடிப்படையில் அமைச்சுப் பணியில் <u>தற்காலிக இளநிலை உதவியாளராக</u> ரூ.19,500/- (Level 8 - Cell 1) என்ற ஊதிய ஏற்ற முறையில் பின்வருமாறு காலியாகவுள்ள இளநிலை உதவியாளர் பதவியில் அலுவலகம் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்படுகிறது.

| மனுதாரர் மற்றும் இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரரின் பெயர் | கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்படும் பதவி | பணியமர்த்தப்படும் அலுவலகம் |
|---|---|---|
| செல்வி.பா.பிரியதர்ஷினி | இளநிலை உதவியாளர் | வட்டாரப்போக்குவரத்து அலுவலர், செங்குன்றம். |

3. மேற்படி ஆணையினைத் தொடர்ந்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர், செங்குன்றம் அவர்கள் தனியரை தங்களது அலுவலகத்தில் பணி நியமனம் செய்து உரிய உத்தரவுகளை கீழகண்ட நிபந்தனைகளுடன் உடனடியாக வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. மேற்கண்ட பணி நியமனம் உத்திரவு வழங்கும்பொழுது, இச்செயல்முறை ஆணையில் உள்ள கீழ்காணும் நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகளை தவறாது குறிப்பிட்டு வழங்கப்பட வேண்டும்.

அ) நியமனதாரர் இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து (15) தினங்களுக்குள் பணியில் சேர வேண்டும். குறிப்பிட்டுள்ள தேதிக்குள் பணியில் சேரத் தவறினால், எவ்வித முன்னறிவிப்புமின்றி கருணை அடிப்படை பணிநியமனப்பட்டியலில் இருந்து பெயர் நீக்கம் செய்யப்படும் எனவும், பணியில் சேருவதற்கு குறிப்பிட்டுள்ள தேதிக்குப் பின்னர் எவ்வித காலநீட்டிப்பும் வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆ) தனியர் பணியில் சேர்ந்தவுடன், தனது வேலை வாய்ப்பக அட்டையினை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் முறையாக ஒப்படைப்பு செய்ய வேண்டும், பின்னர் தனியரது பெயர் வேலைவாய்ப்பிற்காகக் காத்திருப்போர் பட்டியலில் இருந்து நீக்க சம்மந்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கோ அல்லது இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சியகம், சென்னை அவர்களுக்கோ அனுப்பி, தனியரது பெயரை வேலைவாய்ப்பிற்காக காத்திருப்போர் பட்டியலிருந்து நீக்க பரிந்துரை செய்யப்படும்.

இ) 2016-ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் பிரிவு 20(5)-ன்படி, பணியாளர் உடற்தகுதி உடையவராக இருக்கிறாரா என அரசு மருத்துவ அலுவலரிடமிருந்து பெற்ற உடற்தகுதி சான்றிதழ் மூலம் சரிபார்த்து, திருப்திகரமாய் இருக்கும் நிலையில் நியமன அதிகாரி தனியரை பணியில் சேர அனுமதிக்கப்படுவார் எனவும், உடல் ஊனமுற்ற நபர்களைப் பொறுத்தவரையில், மருத்துவக் குழுமத்தினரிடமிருந்து உடல் தகுதிச் சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈ) நியமனதாரர், கருணை அடிப்படை பணி நியமனத்திற்கான விண்ணப்பத்தில் அளித்துள்ள விவரங்கள்/ஆவணங்கள் தவறானவை என பின்னர் தெரியவந்தால், தற்காலிக பணிநியமனம் உடனடியாக ரத்து செய்யப்படும் எனும் நிபந்தனையும், அதன் பேரில் உரிய குற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உ) நியமனதாரர் பணியேற்ற பின்பு, அவரது பணியானது அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, உரிய ஆணை பெறப்பட்ட பின்னரே வரன்முறை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஊ) 2016-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டப்பிரிவு 21(1)-ன்படி தமிழக அரசின் அலுவல் மொழியான தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றதற்கான SSLC மதிப்பெண் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். SSLC பொதுத்தேர்வில், தமிழ் மொழியில் தேர்ச்சி பெறாமல் இருந்தால், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் இரண்டாம் நிலை தமிழ்மொழித் தேர்வில், பணியில் சேர்ந்த தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்குள், தேர்ச்சி பெற வேண்டும்.

(எ) தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள் 1973 விதி 7(3)ன் படி பணியில் சேரும்பொழுது தனது அசையா மற்றும் அசையும் சொத்து விபரப் பட்டியலை உரிய படிவத்தில் (Form I to V) சமர்ப்பிக்க வேண்டும்.

(ஏ) நியமனதாரர், தனது தாய்க்கு வாழ்நாள் முழுவதும் முழு ஆதரவாக இருப்பேன் என்பதற்கான உறுதிமொழி பத்திரம் சமர்ப்பிக்கவேண்டும்.

4. போக்குவரத்துத் துறையில் இளநிலை உதவியாளர் பதவியிலிருந்து அடுத்த நிலையான உதவியாளர் நிலைக்கு பதவி உயர்வு பெற கீழ்க்காணும் பயிற்சி மற்றும் துறைத் தேர்வுகள் தேர்ச்சி பெற வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

(i) பவானி சாகர் அரசு அலுவலர்பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் அடிப்படை பயிற்சி (இதன் தொடர்பாக உத்தரவு முதுநிலை அடிப்படையில் பின்னர் வழங்கப்படும்)
(ii) தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு
(iii) சார்நிலை அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு பகுதி 1
(iv) மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகள் - துறைத் தேர்வு

ஒம்./- சி.நடராசன்,
போக்குவரத்து ஆணையர்,
சென்னை-5.

பெறுநர் (ப.அ.ஒ.அ.)
செல்வி.பா.பிரியதர்ஷினி,
த/பெ. (லேட்) பாபுராஜ்,
305, 5வது தெரு,
சாஸ்திரி நகர், வியாசர்பாடி,
சென்னை-39

நகல்
1. வட்டாரப்போக்குவரத்து அலுவலர், செங்குன்றம்( பணியாளர் பணியில் சேர்ந்த விவரத்தினை உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)
2. இணைப் போக்குவரத்து ஆணையர், சென்னை(வடக்கு சரகம்). (மின்னஞ்சலில்)
3. தனி எழுத்தர், போ.ஆ. /கூ.போ.ஆ/ இ.போ.ஆ.(நி) / து.போ.ஆ.(நி). து.போ.ஆ நி.I,II (மின்னஞ்சலில்)
4. பணியமைப்பு ஆணைப்புத்தகம்/ உபரி

//ஆணைப்படி//

22/03/22

இணைப்போக்குவரத்து ஆணையர் (நி)
சென்னை-5.